**மார்ச் – 21**

**"உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள்." - மத் 5 : 44**

இப்படிப்பட்டவர்களுக்கு சார்பாக உங்கள் சொந்த இருதயத்தின் உண்மையான குணத்தை சோதித்துப் பார்க்க, இங்கே ஒரு வழி இருக்கிறது. மகிழ்ச்சியோடு அவர்களுக்குத் தயை செய்யவும், உங்கள் திறமைக்குத் தக்கதாக அவர்கள் தங்களுடைய தப்பிப்போன மார்க்கத்தைக் கண்டு கொள்ளவும் அதை வெல்லவும் அவர்களுக்கு உதவி செய்வீர்களா? அவர்களுக்காக நீங்கள் உருக்கத்துடன் ஜெபிக்கவும், பொறுமையோடு அவர்களுடைய பெலவீனங்களையும், அவர்களுடைய அறிவீனத்தையும், அபிவிருத்தியின் குறைவையும் சகித்து, மேன்மையான முன் மாதிரியினால் அதிக மேன்மையான வழியை அவர்களுக்குக் காண்பிக்கப் பிரயாசப்படவும் உங்களால் கூடுமா? நிலைமை இந்த விதமாக இருக்குமானால், நீங்கள் அசட்டை பண்ணுவது பாவத்தையே, பாவியை அல்ல. பாவத்தை நீங்கள் வெறுக்க வேண்டும். ஆனால் பாவியை ஒருபொழுதும் வெறுக்கக் கூடாது. பாவத்தையும், பாவியையும் பிரிக்கக் கூடாதபடி சேர்ந்து இணைக்கப்பட்டிருக்கிறதாகத் தேவனுடைய தவறாத தீர்ப்பு அறிக்கை செய்யும் வரை, அன்பு ஒரு சகோதர மனிதன் மேலுள்ள பற்றை விட்டு விடாதிருப்பதாக! **- Z '91, 141 (R 1330).**

சத்துருவுக்குக் காட்டும் அன்பே அன்பின் பூரணம். சத்துருக்களுக்குக் காட்டும் அன்பை விட, அபிவிருத்தி செய்வதில் மிகவும் கடினமானதொன்று, அன்பில் இருக்கிறதுமில்லை. யார்தான் சத்துருவை நேசிக்கவும், ஆசிர்வதிக்கவும் அவர்களுக்கு நன்மை செய்து அவர்களுக்காக ஜெபிக்கவும் செய்கிறானோ, அவனே உண்மையான குணத்தில் ஐசுவரியவனாக இருக்கிறான். கடைசி வரை இந்த சுபாவத்தை அவன் உறுதியுடன் நிர்வகித்தால், நித்திய ராஜ்யத்தில் பிரவேசிக்க நிச்சயமுள்ளவனாயிருப்பான். ஏனெனில் இது தேவனுக்காகவும், யேசுவுக்காகவும், சகோதரருக்காகவும், உலகத்தின் மனிதர்களுக்காகவும் இருக்க வேண்டிய, தகுதியான அன்பு இருப்பதாக முன்னதாகவே நினைத்துக் கொள்ளுகிறது. இவைகளெல்லாம் சேர்ந்து பூரண அன்பை உண்டாக்குகின்றன. **-P '35, 32.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

யாத் 23:4,5; நீதி 20:22; 24:29; 25:21; லூக் 6:27,35; ரோம 12:14,17,19,20; மத் 5:10-12; 45-47; லூக் 23:34; அப் 7:60; 1கொரி 4:12,14; 1பேது 2:23.

**கோபுர வாசிப்பு : Z '02, 57 (R 2957)**

**வினாக்கள் :** இந்த வாரத்தில் இந்த வசனம் எனக்கு என்ன அர்த்தமுள்ளதாயிருந்தது? அதன் வெளிச்சத்தில் நான் எவ்வாறு நடந்து கொண்டேன்? உதவியாயிருந்ததும் இடையூறாயிருந்ததும் எவை? ஏற்பட்ட விளைவுகள் என்ன?